சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 21/2018

பெயர் திரு. சக்திவேல் த/பெ. சுப்புராயன் **நாள். 13**.06.2025

**வாதி சாட்சி 2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் போவதற்காக வழி கேட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தேன். எனக்கு ஆங்கிலம் படிக்கத் தெரியாது. இவ்வழக்கு பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளைக்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், வழி கேட்டு தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னாலும் சரிதான். என் உடன் பிறந்தவர்கள் சரவணன், குமரவேல் மற்றும் செல்வி. ராஜலட்சுமி, சசிகலா மற்றும் சரளா ஆகியோர் என் சிறிய தகப்பனார் மகள்களாவர். சொத்து என் பாட்டனார் ஆண்டி மற்றும் ஆறுமுகம் ஆகியோருக்கு உரிமையான சொத்துக்களாகும். ஆண்டிக்கு பொன்னுசாமி மற்றும் வடிவேல் வாரிசுகளாவர். ஆறுமுகத்திற்கு எட்டியான், சுப்புராயன், சின்னகுழந்தை மற்றும் பூங்காவனம் ஆகியோர் வாரிசுகளாவர். எட்டியானின் வாரிசுகள் தெய்வநாயகி, விஜயா, விசாலம் மற்றும் இளங்கோவன் ஆகியோர். பொன்னுசாமியின் வாரிசுகள் சின்னு, ஜானகிராமன், மீனாட்சி மற்றும் ஒருவர் பெயர் தெரியவில்லை. ராஜம்மாள் பொன்னுசாமியின் மகள் ஆவார். வடிவேலின் வாரிசுகள் வேதநந்தன், ஜெகதா மற்றும் புஷ்பா ஆவர். அதேபோல் சுப்புராயனின் வாரிசுகள் சரவணன், சக்திவேல் மற்றும் குமரவேல் என்றால் சரிதான். பூங்காவனத்தின் வாரிசுகள் திருலோக சந்தர், சசிகலா, சரளா மற்றும் நாகராஜ் ஆகியோர். மேற்கண்ட நபர்களை வழக்கில் தரப்பினராக சேரக்கவில்லை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

2) சொத்துக்கள் ஆண்டியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல, பூர்வீக சொத்துக்கள். பூர்வீக சொத்துக்கள் என்னவென்றால் என் தாத்தா வாங்கிய

சொத்துக்கள் என் பூர்வீக சொத்துக்களாகும். சொத்துக்கள் தனிப்பட்ட சொத்துக்கள் என்றாலும், அதில் நான் வழி கோர இயலாது என்றாலும் சரியல்ல. வழிக்காக வேண்டி நான் என்ன சொத்து கிரயம் வாங்கினேன் என்றால் என் சிறிய தகப்பனார்தான் அவருக்கு வழி வேண்டி தொகை கொடுத்து கிரயம் வாங்கினார். என் சொத்திலேயே எனக்கு வழி உள்ளது என்றாலும், வழக்கு சொத்த்தல் நான் வழி கோர இயலாது என்றாலும் சரியல்ல. அதேபோல் ஆண்டி மற்றும் ஆறுமுகத்திற்கு பூர்வீக சொத்துக்கள் கிடையாது என்றால் சரியல்ல. ஆண்டியும், ஆறுமுகமும் உடன் பிறந்த சகோதர்கள். எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் என் பாட்டனார்கள் என்பதால் தெரியும். அவர்கள் இருவரும் சகோதரர்கள் அல்ல என்றாலும், வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அவர்கள் இருவரின் தகப்பனார் வெவ்வேறு நபர்கள் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.